சார்பு நீதிமன்றம், பல்லடம்.

MCOP.NO 63/2022

மனுதாரர் தரப்பு சாட்சி : PW1

பெயர் மற்றும் வயது : மாரிமுத்து

தந்தை பெயர் : லட்சுமணன்

தொழில் :

கிராமம் :

தாலுகா : பல்லடம்

மாவட்டம் : திருப்பூர் மாவட்டம்

2026 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 09 ஆம் நாள் திங்கட்கிழமை திரு.க.யுவராஜ்,பி.ஏ.,பி.ஏல்., சார்பு மற்றும் உதவி அமர்வு நீதிபதி, பல்லடம் அவர்களின் முன்னிலையில் சாட்சிக்கு இந்நீதிமன்ற இரண்டாம் நிலை பெஞ்ச் கிளார்க் அவர்களால் சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டது

**மனுதாரர் தரப்பில் சாட்சி வரவழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணத்தின் பேரில் முதல் விசாரணை**

எனது தரப்பு முதல் விசாரணையை எழுத்து மூல நிரூபண பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ளது எனது கையெழுத்து தான். நான் சொன்ன விவரங்களை கணினியில் பதிவு செய்து அதனை நான் சரிபார்த்து கையெழுத்து செய்து தாக்கல் செய்துள்ளேன். எனது தரப்பு ஆவணங்களாக

1. முதல் தகவல் அறிக்கை ம.சா.ஆ. 1 ஆகவும்
2. இறுதி அறிக்கை நகல் ம.சா.ஆ 2 ஆகவும்
3. வாகன ஆய்வாளர் அறிக்கை நகல் ம.சா.ஆ 3 ஆகவும்
4. காயச்சான்றிதழ் நகல் ம.சா.ஆ. 4 ஆகவும்
5. முத்தூஸ் மருத்துவமனையில் 07.02.2022 முதல் 12.06.2022 தேதி வரையில் வழங்கப்பட்ட மருத்துவ குறிப்பு அசல் ம.சா.ஆ 5 ஆகவும்
6. முத்தூஸ் மருத்துவமனையில் 14.06.2022 முதல் 27.07.2022 தேதி வரையில் வழங்கப்பட்ட மருத்துவ குறிப்பு அசல் ம.சா.ஆ 6 ஆகவும்
7. முத்தூஸ் மருத்துவமனையில் 29.07.2022 முதல் 25.09.2022 தேதி வரையில் வழங்கப்பட்ட மருத்துவ குறிப்பு அசல் ம.சா.ஆ 7 ஆகவும்
8. முத்தூஸ் மருத்துவமனையில் 02.11.2022 முதல் 12.11.2022 தேதி வரையில் வழங்கப்பட்ட மருத்துவ குறிப்பு அசல் ம.சா.ஆ 8 ஆகவும்
9. முத்தூஸ் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றதற்கான மருத்துவச் செலவு ரூ. 18,56,724/- க்கான மருத்துவ பில்கள் அசல் ம.சா.ஆ 9 ஆகவும்
10. புகைப்பட நகல் ம.சா.ஆ 10 ஆகவும்

11. மனுதாரர் ஆதார் அட்டை நகல் ம.சா.ஆ. 11 ஆகவும்

**2 வது எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

1. விபத்து சமயத்தில் நான் தான் வாகனத்தை ஓட்டினேன் எனக்கு பின்னால் எனது மனைவி அமர்ந்து வந்தார் என்றால் சரிதான். விபத்து சமயத்தில் எனக்கு உரிய ஓட்டுநர் உரிமம் வாகனத்திற்கு காப்பீடு மற்றும் உரிய தகுதி சான்று இல்லை என்றால் சரியல்ல, ஆனால் எனது வாகனத்திற்கு காப்பீடு இல்லை. ஓட்டுவதற்கு தகுதியே இல்லாத வாகனத்தில் பயணம் செய்து மேற்படி விபத்தை நான் வரவழைத்து கொண்டேன் என்றால் சரியல்ல. நான் எனது பிரமாண வாக்குமூலம் Para 2 ல் Bolero Zeta என குறிப்பிட்டுள்ளேன், அந்த வாகனம் தான் விபத்து ஏற்படுத்தியா என்றால் எனக்கு என்ன பெயர் வாகனம் என்று குறிப்பிட்டு ஞாபகம் இல்லை. நான் இதற்கு முன்பு தாக்கல் செய்துள்ள ஆவணங்களில் வாகனத்தின் பெயர் Boleno என்று வாகனத்தின் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது, ஆனாால் எனது பிரமாண வாக்குமூலத்தில் Bolero என சொல்லியுள்ளேன். எனவே எனது சாட்சியம் ஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல என்றால் சரியல்ல.

2. எனது கவனக்குறைவால் தான் விபத்து நடந்துள்ளது என்றால் சரியல்ல. என்னால் விபத்து நேரத்தில் தலைகவசம் அணியவில்லை, எனவே தான் எனக்கு தலையில் எலும்பு முறிவு ஏற்பட்டது என்றால் சரியல்ல. எனக்கு தவறான சிகிச்சை அளிக்கப்பட்டதால் தான் மருத்துவமனையில் 237 நாட்கள் தொடர் சிகிச்கையில் இருந்துள்ளேன் என்றால் சரியல்ல. எனவே எனது மருத்துவ விடுப்புகளான ம.சா.ஆ. 6 முதல் ம.சா.ஆ 8 ன் படி நான் நல்ல நிலையில் இருப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அதிக இழப்பீடு பெற வேண்டி மருத்துவ பில்களை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எனது மாத வருமானத்தை காட்ட எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனக்கு பூரணமாக குணமாகிவிட்டது எனவே எனக்கு வருமான இழப்பு இல்லை என்றால் சரியல்ல. தவறான தகவலின் பேரில் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

சாட்சி கூறிய படி என் வாய்மொழிப்படி தட்டச்சரால் நேரடியாக கணிணியில் தட்டச்சிடப்பட்டு, சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்து பெறப்பட்டத

(Sd/–)K.Yuvaraj,B.A.,B.L.,
சார்பு நீதிபதி, பல்லடம்.